வில்லை. முடிந்ததும் மதுரை மாநகராட்சி ஆணையாளர் பரிந்துரை அனுப்பும்போது நாம் நிரந்தரப்படுத்துகிறோம். எப்போது 10 ஆண்டுகள் வருகின்றதோ அப்போது நிரந்தரமாக்கப்படும்.

திரு. கே. சுப்பராயன் : தலைவர் அவர்களே, 480 நாட்கள் வேலை செய்தால் ஒரு தொழிலாளி பெர்மனன்ட் செய்யப்படவேண்டும் என்ற சட்டத்தை இயற்றிய அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சர் அவர்கள் இங்கே தினக்கூலித் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதிலே காலதாமதத்தை நியாயப்படுத்துவது பொருத்தமாக இருக்காது என்ற முறையில், 480 நாட்கள் வேலை செய்த அனைத்துத் தொழிலாளர்களையும் அரசுத் துறையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 480 நாள் என்று நாம் போட்டு இருக்கின்ற சட்டம்--- வேலையிலே வைத்துக் கொள்கிறார்கள், பின்னர் அனுப்பி விடுகிறார்கள். அவர்களுக்காக அதாவது காஷூவல் லேபரர்ஸ் மாதிரி வைத்துக் கொள்கிறார்கள்---அவர்களுக்கு அந்த வாய்ப்பை நாம் பெற்றுத்தரவேண்டும் என்பது நோக்கம். இது, அவர்கள் வேலையிலேயே இருக்கிறார்கள். சம்பளம், பென்ஷன் இந்த மாதிரி அவர்களுக்குரிய வேலை நிலைமைகள்தான் மாற்றம். நிரந்தரமாக வேலையிலே இருக்கிறார்கள். ஓர்க்-சார்ஜ்ட் எஸ்டாபிளிஷ்மெண்டாக இருக்கிறார்கள். ரெகுலர் புரொவின்சியல் கேடருக்கு, எஸ்டாபிளிஷ்மெண்டிற்கு வருவதற்குத்தான் இந்த விதிமுறை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கம்பம் தொகுதி ஹைவேவ்ஸ் டவுன்சிப்பை ஊராட்சியாக மாற்றல்

385---(*வினா எண் 13803) திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

கம்பம் தொகுதியில் உள்ள ஹைவேவ்ஸ் டவுன்சிப்பை ஊராட்சியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

1987 ஏப்ரல் 23]

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைவேவ்ஸ் நகரியம் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகும். பல இலட்சக்கணக்கான பணம் வரியாக அந்த நகரியத்திற்குக் கிடைக்கிறது. நகரியமாக இருப்பதால் எவ்வித முன்னேற்ற வேலைகளும் செய்ய முடிவதில்லை. மேலும் மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டமும் பரிந்துரை செய்துள்ளது. அதை மனதிலே கொண்டு நகரியமாக ஆக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நகரியமாகத்தான் இருக்கிறது. அதிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்—இவர்கள் எல்லோரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஒன்றும் நடைபெறவில்லை என்றால் நாம் வேறு என்னதான் செய்வது ?

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைவேவ்ஸ் நகரியப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் ஐ.ஆர்.டி.பி போன்ற ரூரல் பெனிபிஷியல் திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. எனவே, அந்தப் பகுதி மக்களின் நலனைக் கருதி, ஹைவேவ்ஸ் நகரியத்தை ஊராட்சி ஆக்குவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நகரியம் என்கிறபோது சில வசதிகள் கிடைக்கின்றன. கிராமங்கள் என்கிறபோது சில வசதிகள் கிடைக்கின்றன. நகரியமாக ஆக்கப்பட்ட பிறகு கிராமங்களுக்கு நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களின் வசதியை எதிர்பார்ப்பது சரி அல்ல.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, ஹைவேவ்ஸ் என்கின்ற மலைப் பகுதியானது மேகமலை ஏரியாவிலே இருக்கிறது. அங்கே தமிழக அரசினுடைய சமூக நலத் திட்டங்களான பால் பண்ணை மற்றும் கூட்டுறவு சம்பந்தமான சில வங்கிகள் மூலமாக அங்கே உதவிகள் கிடைப்பதற்கு அங்கே சென்றால் அங்கேயிருக்கின்ற அந்த எஸ்டேட்—தேயிலைத் தோட்ட அதிபர்கள் அவற்றை அனுமதிக்க மறுக்கிறார்கள். ஆகவே, பால், கூட்டுறவு போன்ற அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு அரசு தனியாக ஒரு அறிவுரை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அறிவுரை வழங்குவதற்கு என்னால் இயலுமா என்று தெரியவில்லை. அவர்களாகச் சேர்ந்து அமைத்துக் கொள்வதில் எந்தச் சங்கடமும் இல்லை என்றுதான் கருதுகிறேன்.